**செய்தி வெளியீடு எண்: 375** **நாள்: 25.02.2024**

**செய்தி வெளியீடு**

**தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் நடைபெற்றுவரும் வெள்ளத் தடுப்பு கட்டமைப்புப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி த் திட்டப் பணிகளைஇன்று (25.02.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 03.02.2024 அன்று தலைமைச் செயலகத்தில் "டிசம்பர் 2023ல் நிகழ்ந்த இரட்டைப் பேரிடர்களின் படிப்பினைகள் மற்றும் எதிர்கால முன்னெடுப்புகள் (Learning from Twin Disasters of December 2023 and Way Forward)" குறித்த ஒரு நாள் கருத்து பரிமாற்றப் பயிலரங்கம் நடைபெற்றது. இதில் தலைமைச் செயலாளர் அவர்கள் வெள்ளத் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் நடைபெற்றுவரும் வெள்ளத் தடுப்பு கட்டமைப்புப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை இன்று (25.02.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## நீர்வளத்துறையின் பணிகள்

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள், நீர்வளத்துறையின் சார்பில் ஆலந்தூர் மண்டலம், வார்டு–157க்குட்பட்ட ரிவர்வியூ காலனியில் ரூ.24.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மியாட் பாலம் முதல் விமான நிலையம் வரை அடையாறு ஆற்றில் கரையை பலப்படுத்துதல், வெள்ளத்தடுப்புச் சுவர் அமைத்தல், நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல் போன்ற பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் குறித்து கேட்டறிந்து, பணியை 31.08.2024க்குள் முன்னதாக முடிப்பதற்கான திட்டங்களை வகுத்திட நீர்வளத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், அலுவலர் பயிற்சி அகாடமி, மணப்பாக்கம் கால்வாயில் ரூ.34 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் போரூர் ஏரியின் உபரிநீர் கால்வாயினை மேம்படுத்துதல் மற்றும் நீர் ஒழுங்கி அமைத்தல் பணியில் மணப்பாக்கம் கிராமத்தில் உள்ள OTA வளாகத்தில் உள்ள மணப்பாக்கம் கால்வாயில் முடிக்கப்பட்ட பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அடையாறு ஆற்றில் கால்வாய்

இணைக்குமாறும், நிலத்தைக் கையகப்படுத்தி கால்வாய் அமைக்கும் பணியை மழைக்கு முன் விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தர்மராஜபுரம் பகுதியில் கொளப்பாக்கம் கால்வாயில் ரூ.8.74 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்புச்சுவர் கட்டுதல், அகலப்படுத்துதல் மற்றும் தூர்வாரும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கெருகம்பாக்கம் சாலையில் நடைபெறும் பணியை மழைக்குமுன் விரைந்து முடித்திட நீர்வளத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கொளப்பாக்கம் கால்வாய்–1லிருந்து ஓடை வரை கொளப்பாக்கம்–பொழிச்சலூர் சாலையில் ரூ.11.72 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மழைக்கு முன்னதாக பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

கெருகம்பாக்கம் கால்வாயில் ரூ.19.16 கோடி மதிப்பில் 160 மீ. முதல் 1500 மீ. வரை மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்படுத்தும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, குன்றத்தூர் சாலையில் உள்ள சிறுபாலப் பணிகளை விரைந்து முடித்திடவும், மணப்பாக்கம் கால்வாயில் வெள்ளநீரை கட்டுப்படுத்த கதவணைகள் அமைக்குமாறும் நீர்வளத்துறை அலுவலர்களுக்கு தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**போரூர் ஏரி–நவீன தொழில்நுட்பப் பணிகளின் விவரம்**

போரூர் ஏரி 250 ஏக்கர் பரப்பளவிலான மிகப்பெரிய ஏரி. இது சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரம். ஒரு காலத்தில் விவசாயத்திற்கு பயன்பட்டு வந்தபோது, வெள்ளநீரானது மதனந்தபுரம், மௌலிவாக்கம் வழியாக விவசாய நிலங்களில் வடிந்து அடையாறு ஆற்றை அடைந்தது. பின்னர் நகரமயமாக்கல் மற்றும் மேகவெடிப்பு காரணமாக ஐயப்பன்தாங்கல், மாங்காடு, பரணிபுத்தூர், மதனந்தபுரம் போன்ற பகுதிகள் தண்ணீரில் மூழ்கியது.

கடந்த ஆண்டு பெய்த கனமழையின் காரணமாக, போரூர் ஏரி நிரம்பி வெள்ளம் ஏற்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரடியாகப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அடுத்த ஆண்டு இதுபோல் வெள்ள பாதிப்பு ஏற்படாதவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அதனடிப்படையில், 14 இடங்களில் போரூர் ஏரியில் வெள்ளநீர் வடிகால்களை அமைக்க திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள் முதற்கட்டமாக, ரூ.100 கோடி மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்தார்கள். இதில் 4 இடங்களில் வெள்ள நீர் வடிகால்கள் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**முன்கூட்டியே நீர் திறத்தல் (Pre–Emptying)**

ஏரியில் நீர்மட்டம் உயர்ந்து தடுப்பணை நிரம்பி நீர் வெளியாவதற்கு முன்பாகவே, நான்கு நீர் ஒடுங்கிகள் அமைக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படுகிறது. இந்த அணுகுமுறை முன்கூட்டியே நீர் திறத்தல் (Pre–Emptying) எனப்படுகிறது.

**மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணி (Cut & Cover)**

பருவமழைக் காலங்களில் போரூர் ஏரியின் நீர்மட்டம் உயர தந்திக் கால்வாயில் வரும் அதிகப்படியான வெள்ளநீர் குடியிருப்பு பகுதிகளில் சூழ்கிறது. இதனைத் தடுப்பதற்காக தந்திக் கால்வாய் நீர் போரூர் ஏரிக்கு செல்வதற்கு முன்பாகவே Shutter அமைத்து திசை திருப்பப்படுகிறது. வெள்ள நீர் ஓடும் சாலைகளே வெள்ள நீர் வடிகால்களாக தற்பொழுது மாற்றப்பட்டு, தந்திக் கால்வாயிலிருந்து போரூர் ஏரியின் உபரிநீர் கால்வாய் வரை ரூ.16.70 கோடி மதிப்பில் 700 மீ. நீளத்தில் புதிதாக மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணி (Cut & Cover) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ரூ.39.6 கோடி மதிப்பில் போரூர் ஏரியில் புதிய மதகு அமைத்தல், போரூர் ஏரியிலிருந்து இராமாபுரம் ஓடை வரை 3.3 கி.மீ. நீளத்திற்கு மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, சாலையின் அடியில் வெள்ளநீர் இராமபுரம் ஓடையில் வெளியேற்றப்படுகிறது.

**Push Through Culvert தொழில்நுட்பம்**

மதுரவாயல் பைபாஸ் சாலையானது தென்தமிழகத்தை சென்னையுடன் இணைக்கும் முக்கியச் சாலையாகும். அதேசமயம் போரூர் வெள்ளநீர் வடிவதற்கு இந்தச் சாலை தடையாகவும் உள்ளது. எனவே, போக்குவரத்திற்கு பாதிப்பு இல்லாமல் சாலையின் மறுபுறம் வெள்ளநீரை கொண்டு செல்லும் வகையில் Push Through Culvert தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தேசிய நெடுஞ்சாலை புறவழிச் சாலையில் ரூ.9.7 கோடி மதிப்பில் கூடுதல் பெட்டி வடிவ கால்வாய்கள் முறை மூலம் அமைத்தல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கல்வாய்கள் அமைக்கப்படவில்லையென்றால் கடந்த வருடம் ஒரேநாளில் பெய்த கனமழையில் அந்தப் பகுதியில் பெரிய அளவு பாதிப்பு ஏற்பட்டிருக்கும். இந்த அமைப்பு மூலம் தற்பொழுது தனலட்சுமி நகருக்கு

நிரந்தரத் தீர்வு கிடைத்திருக்கிறது. இதேபோன்று, கொலப்பாக்கம், கெருகம்பாக்கம் போன்ற பகுதிகளிலும் வெள்ளநீர் வடிவதற்காக வெள்ளநீர் வடிகால் அமைக்கும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தப் பணிகளால் போரூர் ஏரியின் அருகில் உள்ள கெருகம்பாக்கம், கொளப்பாக்கம், மதனந்தபுரம், முகலிவாக்கம் மற்றும் மணப்பாக்கம் பகுதிகளில் உள்ள சுமார் 10 இலட்சம் மக்கள் பயனடைவர்.

இதன் தொடர்ச்சியாக, நேப்பியர் பாலம் முகத்துவாரப் பகுதியில் நீர்வளத்துறையின் சார்பில் ரூ.70 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமாணப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## நெடுஞ்சாலைத்துறை பணிகள்

தலைமைச் செயலாளர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் அடையாறு மண்டலம், வேளச்சேரி பிரதான சாலையில் ரூ.4 கோடி மதிப்பில் 1.5 கி.மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்ட சாலைப் பணிகளின் தரம் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர், வேளச்சேரி பிரதான சாலையில் அணை ஏரி, பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை இணைக்கும் இணைப்பு கால்வாய் பணிகளுக்காக நிலம் எடுக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் பணிகள்

தேனாம்பேட்டை மண்டலம், தொல்காப்பியப் பூங்காவில் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் சார்பில் 42.45 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மறுசீரமைப்புப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள்

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பைகளை ரூ.350.65 கோடி மதிப்பீட்டில் உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் பிரித்தெடுத்து நிலத்தை மீட்டெடுக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், தேனாம்பேட்டை மண்டலம், மெரினா லூப் சாலையில் பொதுமக்கள் தனியார் பங்களிப்புடன் கட்டப்பட்டு வரும் ஒப்பனை அறை கட்டுமான பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இராயபுரம் மண்டலம், வார்டு–57க்குட்பட்ட யானைக்கவுனி பாலச் சாலையில் ரூ.30.78 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பால கட்டுமாணப்

பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, ஒரு வழிப்பாதையை 10 நாட்களுக்குள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் பணிகள்**

திருவொற்றியூர் குப்பம் பகுதியில் ரூ.200 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சூரை மீன்பிடி துறைமுகக் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## இந்த ஆய்வுகளின் போது தலைமைச் செயலாளர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

பெருநகர சென்னை மாநகராட்சியில் பெரும்பாலான மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. வடகிழக்குப் பருவமழைக்குப் பிறகு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் சில பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக கிருகம்பாக்கம், கொளப்பாக்கம், முகலிவாக்கம், மணப்பாக்கம் பகுதிகளில் நீர்வளத்துறையின் சார்பில் சுமார் ரூ.180 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பணிகள் அனைத்தும் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் முடிக்கப்படும். இந்தப் பணிகள் முடிக்கப்பட்டால் போரூர் ஏரி மற்றும் மேற்குப் பகுதியிலிருந்து வரும் வெள்ளநீர் இந்த வடிகால்கள் வழியாக நேரடியாக அடையாறு ஆற்றில் சென்றடையும். இந்தப் பகுதிகளில் வெள்ளப் பாதிப்பு இருக்காது.

அடையாறு ஆற்றில் வெள்ளநீர் செல்வதற்காக எங்கெங்கு மழைநீர் வடிகால் பணிகள் அமைக்கப்பட்டுள்ளதோ, அங்கு Shutters அமைக்கப்பட்டு, ஆற்றிலிருந்து மழைநீர் வெளியேறாமல் Shutters அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இந்தப் பணிகள் ஓரிரு நாட்களில் தொடங்கப்படும்.

மேலும், சென்னை மாநகரத்தில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் சில பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, குறிப்பாக வேளச்சேரி, தாம்பரம் நெடுஞ்சாலையில் பள்ளிக்கரணை சதுப்புநிலத்திற்கு மழைநீர் வருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்காலிகமாக அங்கு குழாய் அமைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. விரைவில் இங்குப் பணிகள் தொடங்கப்பட்டு பருவமழைக்கு முன்னதாக முடிக்கப்படும்.

தற்பொழுது மழை முடிந்தவுடன் எங்கெங்கு பணிகள் முடிக்கப்பட வேண்டும் எனக் கண்டறிந்து, அங்கு பணிகளை விரைவில் தொடங்கி முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலர் டாக்டர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீனவளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., அவர்கள், நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர்/சென்னை நதிகள் சீரமைப்புக் அறக்கட்டளை உறுப்பினர் செயலர் டாக்டர் எஸ். விஜயகுமார், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) திரு.ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., அவர்கள், வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எம்.பி. அமித், இ.ஆ.ப., (தெற்கு), திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு), நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் திரு. அசோகன், பெருநகர சென்னை மாநகராட்சி தலைமைப் பொறியாளர்கள் திரு.எஸ். ராஜேந்திரன் (பொது), திரு.சரவணபவானந்தம் (பாலங்கள்) உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in